මගේ අංකය
எனது இல DDD/HO/MF/05/02/08/ திரியமாதா
My No

ඔබේ අංකය
உமது இல ............................................
Your No

දිනය
திகதி 2017.03
Date

**வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி சுற்றறிக்கை இலக்கம் : வா.ச.வ 2017/03**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்கள் /

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையார்களுக்கு

## சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டமும், திரியமாதா சேமிப்பு வைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டமும் - 2017

### 01. அறிமுகம் :-

2017 மார்ச் 08ம் திகதிய சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக திரியமாதா சேமிப்பு வைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளது.

எமது மகளிர் / இல்லத்தரசிகள் வீட்டு நிர்வாகத்தின் ஊடாக சிக்கனத்திற்கு முதலிடத்தினை வழங்கிவருகின்றனர். இம் முன்மாதிரியினை மேலும் பலப்படுத்தும் பொருட்டு சேமிப்பு வைப்புப்பிரிவால் புதிய ஒரு திட்டத்தினை உருவாக்கி அவர்களது பொருளாதார நிலமையினை வலுப்படுத்தி அதன் பொருளாதார நன்மைகளை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடச் செய்ய முடியும். அதற்காக திரியமாதா கணக்கின் ஊடாக சேமிப்பதும் புதிய கணக்குகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதும் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 02. உத்தேச சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்

02.1 நாடுபூராகவும்முள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் 1074 இலும் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டமானது திரியமாதா சேமிப்பு வைப்புக் கணக்குகளுக்கு மாத்திரம் வைப்புக்களை சேகரிப்பதுடன் அதன் மூலம் **275** மில்லியன் ரூபாவை வைப்பாக சேகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02.2 மொத்த இலக்கினை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளுக்கிடையே சராசரியாக பிரித்து செயற்படுத்துவதுடன் ஒரு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி ஆகக் குறைந்தது ரூபா **250,000/=** வைப்புத் தொகையாக சேகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.



Tel- Fax - E-mail-

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General / 011-2873802/2872202 / 011-2889002 / dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource) / 011-2873799 / 011-2873996 / diradmin@divineguma.gov.lk / Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant / 011-2869742 / 011-2869742 / finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) / 011-2889003 / 011-2887469 / Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office / 011-2887280 / Hot Line: 011- 2887722

02.3 நாடு தழுவிய ரீதியில் **20,000** திரியமாதா சேமிப்புக்கணக்குகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்படுவதுடன் புதிதாக நிவாரணங்களைப் பெற தகுதிபெறும் குடும்பங்களின் பெண்கள் உட்பட சகல பெண்களையும் இலக்குவைத்து இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் வேண்டும். இங்கு ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியும் குறைந்தது புதிதாக **20** திரியமாதா கணக்குகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

02.4 தேசியரீதியான இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிக்கும் இலக்குகள் காணப்படுவதுடன் அந்த இலக்குகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு வங்கியின் அதிகாரப் பிரதேசங்களுக்குரிய சகல கிராமசேவகர் பிரிவுகளுக்கும் இலக்குகள் பிரித்து வழங்கப்படல்வேண்டும்.

02.5 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் இலக்குகளை ஒன்று சேர்த்து வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் இலக்கினை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

## 03. மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் காலவரையறை.

**2017** மார்ச் **08ஆம்** திகதியில் இருந்து **20ஆம்** திகதி வரைக்கும் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்களை செயற்படுத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ளல்வேண்டும்.

## 04. பிரசார வேலைகளும் அன்பளிப்புக்களை வழங்குவதும்

04.1 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் கள உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் அமைப்புக்களின் தலைவர்கள் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் விழிப்பூட்டுவதற்கு உத்தேசிக்கின்ற வங்கிகள் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகிக்க முடியும். அதன் பொருட்டு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியொன்றிலிருந்து உயர்ந்தபட்சம் ரூபா 2000/= தொகையினை செலவு செய்ய முடியும். இதனை செலவுக் கணக்கு – வங்கி மேம்பாட்டு நடவடிக்கை கணக்கில் பற்று வைத்து பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04.2 தமது அதிகார பிரதேசத்தின் சகல வங்கிகளுக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவதனை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் ஒருங்கிணைப்புச் செய்து மேற்கொள்ளல் வேண்டும். துண்டுப்பிரசுர அச்சிடலானது அத்தியாவசியமான ஒரு விடயமாக அமையாது.

04.3 இச் சேமிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவேயுள்ள திரியமாதா சேமிப்புக் கணக்கில் அல்லது புதிதாக ஆரம்பிக்கின்ற திரியமாதா கணக்குகளின் பொருட்டு சேமிக்கின்ற தொகைக்கு கணக்குடையோருக்கு ஞாபகார்த்த அன்பளிப்பு ஒன்றினை வழங்கமுடியும். அந்த அன்பளிப்பின் பொருட்டு வங்கியானது உயர்ந்தபட்சமாக சேகரிக்கின்ற தொகையிலிருந்து 5%க்கு மேற்படாத தொகையினை வங்கி நிதியத்திலிருந்து செலவு செய்ய அனுமதியுண்டு. இங்கு ஒவ்வொரு கணக்குடையோனும் மேம்பாட்டு வாரத்திற்குள் வைப்புச் செய்கின்ற தொகைக்குப் பொருத்தமான மற்றும் வித்தியாசமான அன்பளிப்பு ஒன்றினை வழங்குவது தொடர்பில் தீர்மானத்தினை எடுப்பது முகாமையாளர் உட்பட கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்கப்படுகின்றது. இதனுடாக எச்சந்தர்ப்பத்திலும் அந்தந்தக் கணக்குடையோன் வைப்புச் செய்கின்ற தொகையில் 5% த்தையோ அல்லது அதிலும் கூடிய பெறுமதியுள்ள ஞாபகார்த்த அன்பளிப்பினை வழங்கலாகாது

04.4 2017 மார்ச் 08ம் திகதியிலிருந்து 20ம் திகதி வரை திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வைப்புச் செய்கின்ற தொகையினை வங்கியில் ஆகக் குறைந்தது 12 மாதாங்களாவது வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அன்பளிப்புக்களை எதிர்பார்த்து வைப்புக்களை மேற்கொண்டு குறுகிய காலத்திற்குள் பணத்தினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கணக்குடையோர்கள் இருப்பதாக அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த நிலமைகளை தவிர்த்துக் கெள்வதற்கே இவ் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இவை தொடர்பில் வங்கிப் பணியாளர்கள் விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

04.5 அன்பளிப்புப் பொருட்களை தெரிவுசெய்தல் மற்றும் கொள்வனவு செய்கின்ற சந்தர்ப்பங்களில் நிதி வெளிப்படைத்தன்மை பேணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த அன்பளிப்புப் பொருட்களை தெரிவு செய்யும்போது வங்கிக்கான பிரச்சார ரீதியான ஒத்துழைப்பும் நற்பெயரும் கிடைக்கக் கூடியவாறுமேற்கொள்ளல் வேண்டும்.

04.6 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியன் பொருட்டு துரிதமாக எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டு வேலைத் திட்டங்கள் மற்றும் தரப்படுத்தல்களின் போது (Grading) இவ்வாறான சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கின்ற முயற்சிகள் தொடர்பில் கவனஞ்செலுத்தப்படும் என்பதையும் தெரியப்படுத்துகின்றேன்.

04.7. இவ் வேலைத்திட்டத்தின் கீழ் கணக்குடையோர் அன்பளிப்புப் பொருளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அங்கத்தவர் சேமிப்புக் கணக்கில் உள்ள வைப்புத் தொகையினை திரியமாதா கணக்கிற்கு மாற்றம் செய்வதற்கு அல்லது இலக்கினை அடையும் பொருட்டு வங்கிக் கடன்களை வழங்கி அத்தொகையினை மீளவும் திரியமாதா சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்வதனை முற்றாக தவிர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**05. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் கடமைப் பொறுப்புக்கள்**

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் தனது அதிகார பிரதேசத்திற்குச் சொந்தமான வங்கிகளில் செயற்படுத்தும் இந்தமேம்பாட்டு வேலைத்திட்டங்களை வெற்றிகரமானதாக செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும்.

**06. முன்னேற்ற அறிக்கைகளை வழங்குதல்.**

06.1 வங்கிகள் இணைப்பு 01 இல் குறிப்பிட்டப்பட்டுள்ள படிவத்தினை முறையாகப் பூர்த்தி செய்து முன்னேற்றத்தினை 2017.03.28 ம் திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படைச் சங்கத்திற்கு வழங்குதல் வேண்டும்.

06.2 வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் பெற்றுக் கொண்ட முன்னேற்றத்தினை 2017.04.10ம் திகதிக்கு முன்னர் இணைப்பு 02 இன் பிரகாரம் தயாரித்து வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்.

06.3 மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பிரிவால் 2017.04.21 ம் திகதிக்கு முன்னர் சகல சமுதாய அடிப்படை வங்கிகளினதும் முன்னேற்றத்தினை இணைப்பு 02ன் பிரகாரம் தயாரித்து பிரதான காரியாலய வங்கிப் பிரிவுக்கு வழங்குதல் வேண்டும்.

**நீல் பண்டார ஹப்புஹின்ன**
**பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்:-

01. செயலாளர் சமூகவலுவூட்டல்கள் மற்றும் நலனோம்புகை அமைச்சர் - தகவலுக்காக.
02. சகல மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்கள - த.கூ.க.பொருட்டு.
03. சகல பிரதேச செயலாளர்கள் - த.கூ.க.பொருட்டு.
04. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - த.கூ.க.பொருட்டு.

Translated By I. Aliyar (Coordinator N/E)